**செய்தி வெளியீடு எண்.547** **நாள்.27.8.2009**

## வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு சிறப்புச் சலுகை

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஜனவரி 2008 முதல் டிசம்பர் 2008 வரையுள்ள காலத்தில் பதிவினைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு அரசாணை (டி) எண்.478, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ட்டி.2) துறை, நாள்.24.08.2009—ன்படி சிறப்புப் புதுப்பித்தல் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி மேற்படி காலத்தில் புதுப்பிக்கத் தவறியவர்கள் 23.11.2009—க்குள் சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு அலுவலக வேலை நாட்களில் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு அடையாள அட்டையின் நகலுடன் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ விண்ணப்பித்து தங்களது பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளலாம் என திரு. ஆ.சு. ஜீவரத்தினம், ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அவர்கள் தெரிவித்துள்ளார்.

************

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9